ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2482/03 - 2026 මාර්තු මස 30 වැනි සඳුදා - 2026.03.30
*2482/03 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

ச.வ-பி. 7/2023

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 ஆம் மற்றும் 92 ஆம் பிரிவுகளுடன்சேர்த்து வாசிக்கப்படும் 156 ஆம் பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ஹர்ஷன நாணயக்கார,**
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2026 மாச்சு மாதம் 30 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் ஊழல் எதிர்ப்பு (மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையினூடான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. எந்த ஆளுக்கு சட்டத்தின் பாகம் II ஏற்புடையதாகின்றதோ அந்த ஒவ்வொரு ஆளும் https://www.Ciaboc.gov.lk/ald என்னும் வலை இணைப்பின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையினூடாக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் –

   (அ) (முதலாவது நியமன வெளிப்படுத்துகை) நியமனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள்;

   (ஆ) (ஆண்டு வெளிப்படுத்துகை) சட்டத்தின் 82 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆண்டுதோறும்;

   (இ) (பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகை) விடயத்துக்கேற்ப அவரது தொழிற் காலத்தின் முடிவை அல்லது அவரது ஓய்வுபெறும் தேதியை அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் தேதியை உடனடுத்துபின்னர் பதினான்கு நாட் காலப்பகுதியினுள்;

1A - G 46519 - 04 (2026/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) (ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகை) (இ) என்னும் பந்தியின் கீழ் வெளிப்படுத்துகை செய்யப்பட்ட ஆண்டை உடனடுத்துப் பின்வரும் தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளில்;

(உ) (நிமித்த வெளிப்படுத்துகை) பத்து மில்லியன் ரூபா தொகையினதான அல்லது பத்து மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று நிகழ்கின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்; அத்துடன்

(ஊ) விடயத்துக்கேற்ப, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமனப் பத்திரங்கள் தேர்தல்களுக்காக சமர்ப்பிக்கப்படும் போது,

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளைச் செய்தல் வேண்டும்.

3. இரண்டாயிரத்து இருபத்தைந்து மாச்சு 20 ஆந்தேதிய 2428/43 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் ஊழல் எதிர்ப்பு (சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்) ஒழுங்குவிதிகள் அதன்கீழ் சட்டமுறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

4. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

“சட்டம்" என்பது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் எனப் பொருள்படும்;

“சொத்துக்களும் பொறுப்புக்களும்" என்பது, https://www.Ciaboc.gov.lk/ald என்னும் வலை இணைப்பின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையினூடாக அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டிய இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நேரடியாக அல்லது பயன்பெறுமுகமாக சொந்தமாகக் கொள்ளப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் மற்றும் அக்கறைகள் என்பவற்றின் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

“மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமை" என்பது, இலத்திரனியல் வெளிப்படுத்துகைகளின் சமர்ப்பித்தலுக்கும் சரிபார்த்தலுக்குமாக, சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் பேணப்படும் இலத்திரனியல் தரவுதளம் எனப் பொருள்படும்.

## அட்டவணை

(ஒழுங்குவிதி 2)

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்

**1. 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் சமர்ப்பிப்பு.**

ஆரம்பிக்கலாம்

தொடர்வதற்கு முன்னர், தயவுசெய்து தோதான வெளிப்படுத்துதல் வகையைத் தெரிவு செய்து உங்களது நிறுவனத்தினதும் பதவியினதும் விபரங்களை உள்ளீடு செய்யவும். நீங்கள் வழங்கிய தகவல் துல்லியமானது என்பதனையும் வெளிப்படுத்தற் திகதியன்று உங்களது பதவியைப் பிரதிபலிக்கின்றது என்பதனையும் உறுதிப்படுத்தவும். உங்களது பதவி பட்டியலிடப்படவில்லை ஆனால் நீங்கள் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுப்புக்களின் அல்லது விவரிப்புகளின் கீழ் பதவியொன்றை வகிக்கின்றீர்களாயின் "வேறு" என்பதனை தெரிவு செய்து அத்தகைய பதவியை கையினால் தட்டச்சு செய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| வெளிப்படுத்துகையின் வகை | : |
| வெளிப்படுத்துகை ஆண்டு | : |
| வகுப்பு அல்லது விவரிப்பு | : |
| நிறுவனம் | : |
| பதவிப் பெயர் | : |
| அலுவலக முகவரி | : |
| அலுவலகத் தொலைபேசி இலக்கம் | : |
| அலுவலக தொடர்பாடலுக்கு எம் மொழியை நீங்கள் விரும்புகின்றீர்கள்? | : |

**2. வெளிப்படுத்துநரின் சுயவிபரத் தரவு**

**தனிப்பட்ட தகவல்**

முழுப் பெயர் :

முதலெழுத்துக்களுடன் பெயர் :

ஆங்கிலத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (தகவல் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் உள்ளீடு செய்யப்பட்டிருப்பின் மாத்திரம்) :

பிறந்த திகதி :

நாட்டினம் :

தேசிய அடையாள அட்டை இலக்கம் (தேஅஅ) :

கடவுச்சீட்டு இலக்கம் :

வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கம் (TIN) :

இலங்கை தனித்துவ எண்ணிம அடையாள (SLUDI) இலக்கம் :

தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

நிலையான தொலைபேசி இலக்கம் :

தனிப்பட்ட மின்னஞ்சல் :

**நிரந்தர முகவரி**

நாடு :

மாகாணம் :

மாவட்டம் :

நகரம் :

அஞ்சல் குறியீடு :

தெருவின் பெயர் :

இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் :

கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டின் இலக்கம் :

**தற்போதைய முகவரி**

நாடு :

மாகாணம் :

மாவட்டம் :

நகரம் :

அஞ்சல் குறியீடு :

தெருவின் பெயர் :

இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் :

கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டின் இலக்கம் :

**வெளிப்படுத்துநரின் தொழில் விபரங்கள்**

வேலையிடம் அல்லது இணைக்கப்பட்டுள்ள நிறுவனம் :

பதவிப் பெயர் :

அலுவலகத் தொலைபேசி இலக்கம் :

அலுவலக முகவரி :

**வெளிநாடுகளில் வதிவிட உரிமைகள்**

ஏதேனும் வெளிநாட்டில் பிரசாவுரிமை, நிரந்தர வதிவிடம் அல்லது (இரண்டு வருடங்களுக்கு மேல் செல்லுபடியான) நீண்டகால

வீசாவொன்றை நீங்கள் கொண்டிருக்கின்றீர்களா?

| | |
|---|---|
| நாடு | : |
| வதிவிட நிலை | : |

**3. வெளிப்படுத்துநர் தவிர்ந்த உட்படுத்தப்படவேண்டிய வேறு தனிநபர்கள்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 81 ஆம் பிரிவின்கீழ் எனது வெளிப்படுத்துகையில் யாரை நான் உட்படுத்துதல் வேண்டும்?

பின்வரும் ஆட்களின் வகுதிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் (இதனகத்துப்பின்னர் "மேவப்படும் ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்):-

- வெளிப்படுத்துநரின் வாழ்க்கைத்துணை;
- வயதைப் பொருட்படுத்தாது, வெளிப்படுத்துநரில் தங்கிவாழும் ஒவ்வொரு பிள்ளையும்;
- வயதைப் பொருட்படுத்தாது வெளிப்படுத்துநரில் தங்கிவாழும் வேறெவரேனுமாள்; அத்துடன்
- எவரேனுமாள், பரஸ்பர உரிமைகளையும் கடப்பாடுகளையும் வெளிப்படுத்துநருடன் பகிர்ந்து கொள்ளுமிடத்துத் தவிர வெளிப்படுத்துகைத் தேதிக்கு ஆகக்குறைந்தது தொடர்ச்சியான ஆறுமாதக் காலப்பகுதிப்பகுதியொன்றுக்காக, வெளிப்படுத்துநருடன் கூடிவாழ்ந்து பொதுவான வீட்டைப் பகிர்ந்துகொள்கின்ற அத்தகைய ஆள்.

இவ்வெளிப்படுத்துகையில் உள்ளடக்கப்பட வேண்டிய எவரேனும் மேவப்படும் ஆள் இருக்கின்றனரா?

**உங்களது மேவப்படும் ஆளை எவ்வாறு சேர்க்க விரும்புகின்றீர்கள்?**

மேவப்படும் ஆளொருவரின் விபரங்களைக் கையினால் உள்ளீடு செய்தல்
இம்முறையில் வேறொரு வெளிப்படுத்துகையிலிருந்து மேவப்படும் ஆளொருவரின் விபரங்களைத் திரட்டுதல்

**மேவப்படும் ஆளொருவரின் தனிப்பட்ட தகவல்**

| | |
|---|---|
| வெளிப்படுத்துநருடனான உறவுமுறை | : |
| முழுப் பெயர் | : |
| ஆங்கிலத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (தகவல் சிங்களம் அல்லது தமிழில் உள்ளீடு செய்யப்பட்டிருப்பின் மாத்திரம்) | : |
| பிறந்த திகதி | : |
| நாட்டினம் | : |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் (தேஅஅ) | : |
| கடவுச்சீட்டு இலக்கம் | : |
| வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கம் (TIN) | : |
| இலங்கைத் தனித்துவ எண்ணிம அடையாள (SLUDI) இலக்கம் | : |
| தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் | : |
| நிலையான தொலைபேசி இலக்கம் | : |
| தனிப்பட்ட மின்னஞ்சல் | : |

**நிரந்தர முகவரி**

| | |
|---|---|
| நாடு | : |
| மாகாணம் | : |
| மாவட்டம் | : |
| நகரம் | : |
| அஞ்சல் குறியீடு | : |
| தெருவின் பெயர் | : |
| இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் | : |

கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டின் இலக்கம் :
வீட்டின் இலக்கம் :

**தற்போதைய முகவரி**

நாடு :
மாகாணம் :
மாவட்டம் :
நகரம் :
அஞ்சல் குறியீடு :
தெருவின் பெயர் :
இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் :
கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டின் இலக்கம் :

**வெளிநாடுகளில் வதிவிட உரிமைகள்**

ஏதேனும் வெளிநாட்டில் பிரசாவுரிமை, நிரந்தர வதிவிடம் அல்லது (இரண்டு வருடங்களுக்கு மேலான செல்லுபடியான) நீண்டகால விசாவொன்றை நீங்கள் கொண்டிருக்கின்றீர்களா?

நாடு :
வதிவிட நிலை :

**4. வருமானம்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?
வெளிப்படுத்துகை காலப்பகுதியின் போது உங்களாலும் எவரேனும் மேவப்படும் ஆளினாலும் ஈட்டப்படும் எல்லா மொத்த வருமானம் பின்வருவன உள்ளடங்கலான பொதுவான வருமானத்தின் வகைகள்:-

- தொழிலிலிருந்தான நிரந்தர வருமானம்: நீங்கள் முதன்னிலை மற்றும் இரண்டாம் நிலைத்தொழில்களிலிருந்து ஈட்டும் மொத்த வருமானம் (ஏதேனுமிருப்பின்);
- உயர்தொழில் சேவைகள் அல்லது தொழிலிலிருந்தான வருமானம்;
- வீடொன்று அல்லது கடையொன்று அல்லது வேறு ஆதனம் அல்லது சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம்;
- நிலையான வைப்புக்கள் அல்லது சேமிப்புக் கணக்குகள் மீது ஈட்டப்படும் வட்டி;
- பங்குகள் அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது முதலீடுகளின் வேறு வடிவங்களிலிருந்தான பங்கிலாபம்;
- லொத்தர்கள் அல்லது ஆளையொத்த செயற்பாடுகளிலிருந்தான வருமானம்;
- வெளிப்படுத்துகை காலப்பகுதியின் போது பெறப்பட்ட கொடைகள், நன்கொடைகள் அல்லது மரபுரிமைகள்.

அத்தகைய வருமானம் இலங்கைக்கு வெளியேயான மூலமொன்றிலிருந்து பெறப்பட்டிருப்பின் அல்லது அத்தகைய வருமானத்தை இலங்கைக்கு வெளியேவைத்திருப்பினுங்கூட இவ்வருமானத்தை நீங்கள் வெளிப்படுத்துதல் வேண்டும்.

**வெளிப்படுத்துகைக் காலப்பகுதியின் போது வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் பெறப்படும் நிரந்தர வருமானம்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் வெளிப்படுத்துகைக் காலப்பகுதியின் போது ஏதேனும் நிரந்தர வருமானம் பெறப்படுகின்றதா?

**வருமானம் I**

வருமானத்தைப் பெறுகின்ற ஆள் :
நிரந்தர வருமான வகை :
மூலம் (யாரிடமிருந்து வருமானம் பெறப்படுகின்றது) :
நாணய வகை :
வருமானத்தின் மொத்தத் தொகை (ஏற்புடையதாயின் படியுடன்):
மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் :

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் ஈட்டப்பட்ட வெளிப்படுத்துகைக் காலப்பகுதியின் போது பெறப்பட்ட வேறு வருமானம்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் வெளிப்படுத்துகை காலப்பகுதியின் போது வேறேதேனும் வருமானம் பெறப்படுகின்றதா?

**வருமானம் I**

| | |
|---|---|
| வருமானத்தைப் பெறுகின்ற ஆள் | : |
| வழமையான வருமான வகை | : |
| மூலம் (யாரிடமிருந்து வருமானம் பெறப்படுகின்றது) | : |
| நாணய வகை | : |
| வருமானத்தின் மொத்தத் தொகை (ஏற்புடையதாயின் படியுடன்) | : |
| மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**5. அசையா ஆதனங்கள்**

நான் எதனை வெளிப்படுத்தல் வேண்டும்?

உங்களால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் (பதியப்பட்டு அல்லது பதியப்படாது) சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது உடைமையில் வைத்திருக்கப்படும் எல்லா அசையா ஆதனமும் இலங்கையினுள் அமைந்திருந்தாலுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்திருந்தாலுஞ்சரி உங்களால் அல்லது மேவப்படும் ஆளினால் பயன்பெறுமுகமாக கொள்ளப்பட்ட எல்லா அசைவற்ற ஆதனமும் அத்தகைய அசையா ஆதனம் பொதுவில் (ஆனால், அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்) பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது-

- **காணி** - வதிவிட, கமத்தொழில் (நெல் மற்றும் பெருந்தோட்டங்கள் உள்ளடங்கலாக) வர்த்தக, கைத்தொழில், வெற்று அல்லது விருத்தி செய்யப்படாத காணி.
- **கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்** - வீடு, இருப்பிடக்கூறு, கூட்டாட்சியாதனங்கள், கடைகள், அலுவலகங்கள், பண்டகசாலைகள், தொழிற்சாலைகள் அல்லது காணியுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் நிரந்தரக் கட்டமைப்பு.
- **கூட்டாகச் சொந்தமாக வைத்திருக்கும் ஆதனம்** - உங்களுடைய சொத்தாண்மைப் பங்கினை விரிவுபடுத்துவதற்கு வாழ்க்கைத்துணை அல்லது மூன்றாந் திறத்தவர்கள் உட்பட வேறொரு ஆளுடன் கூட்டாகச் சொந்தமாக வைத்திருக்கும் ஆதனம்
- **பயன்பெறுமுகமாக சொந்தமாக வைத்திருக்கும் ஆதனம் -** நீங்கள் கட்டுப்பாட்டை பிரயோகிக்குமிடத்து அல்லது பயன்களைப் பெறுகின்றவிடத்து, வேறொரு ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் ஆதனம்
- **இலங்கைக்கு வெளியே அமைந்திருக்கும் ஆதனம்** - வெளிநாட்டில் அமைந்திருக்கும் ஏதேனும் காணி அல்லது கட்டிடங்கள் முக்கியமானது

**முக்கியமானது :** ஆதனமொன்று, அத்தகைய ஆதனம் பயன்பாட்டிலில்லாதிருப்பினும், வருமானத்தை உருவாக்காதிருப்பினும், ஈட்டொன்றிற்கமைந்திருப்பினும் அல்லது சட்ட முறையான பிணக்கொன்றிலிருப்பினும் கூட வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

பயனுகர் சொத்துவம் அல்லது நன்மைகளை, சட்டமுறையான உரித்து வேறொரு ஆளினால் வைத்திருக்கப்படுகின்றதெனுங் கூட, ஆதனமொன்றின் மீதான ஏதேனும் பொருளாதார அல்லது கட்டுப்பாட்டு உரிமைகள் உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் அனுபவிக்கப்படுமிடத்தான நிலைமைகளை உள்ளடக்குகின்றது.

**உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-**

- ஆதனத்திலிருந்து வாடகை வருமானம், இலாபங்கள் அல்லது விற்பனை வரும்படிகளைப் பெறுதல்.
- ஆதனத்தை கையகப்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கான உரிமைகளைக் கொண்டிருத்தல் (அங்கு வாழ்தல், வியாபாரம் அல்லது வர்த்தகப் பயன்பாடு).
- வாடகைக்குடியிருப்பு, வாடகை, அல்லது முகாமைத்துவம் போன்றவாறான ஆதனம் பற்றிய முடிபுகளைக் கட்டுப்படுத்தல்.
- நம்பிக்கைப் பொறுப்பாளர், பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்கள், உறவினர்கள் அல்லது முறைசாரா ஒழுங்கேற்பாடுகளினூடாக நேரடியாகவல்லாது உரிமைகளை கொண்டிருத்தல்.
- உரித்து வேறொரு ஆளின் பெயரிலிருக்கும் போது ஆதனத்துக்கு நிதியளித்தல் அல்லது உதவுதொகையளித்தல்.

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்படும் ஆள் நடைமுறையில் ஆதனத்தின் இந் நன்மைகள் அல்லது கட்டுப்பாட்டை அனுபவிப்பீர்களாயின் எழுத்திலான உடன்படிக்கையொன்றில்லாதிருப்பினும், பயனுகர் சொத்துவம் உளதாயிருக்கும்.

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது உடைமையில் வைத்திருக்கப்படும் அசையா ஆதனங்கள்**

ஆதனமானது உங்களால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் (கூட்டுச் சொத்துவமுட்பட) சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து, வெளிப்படுத்துவதற்கு ஏதேனும் அசையா ஆதனத்தைக் கொண்டுள்ளீரா?

**அசையா ஆதனம் 1**

சொந்தமாக அல்லது உடைமையில் வைத்திருப்பவர் :

ஆதன வகை :

இவ்வாதனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதா? :

**ஆதன முகவரி**

நாடு :

மாகாணம் :

மாவட்டம் :

நகரம் :

அஞ்சல் குறியீடு :

தெருவின் பெயர் :

இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் அல்லது காணியின் பெயர் :

கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டு இலக்கம் அல்லது மதிப்பீட்டு இலக்கம் :

கட்டிடத் தள இடப்பரப்பு :

காணிப் பரப்பெல்லை :

அத்தகைய ஆதனத்தை எவ்வாறு நீங்கள் கொண்டீர்கள்? யாரிடமிருந்து கொள்ளப்பட்டுள்ளது :

கூட்டுச் சொந்தக்காரரை அல்லது உரிமைகளுடையோரைக் கொண்டுள்ளீரா? :

கூட்டுச் சொந்தக்காரர் அல்லது கூட்டுச் சொந்தக்காரர்களின் பெயர் :

உறுதியின் தேதி :

உறுதி இலக்கம் :

உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி :

நொத்தாரிசின் பெயர் :

மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் :

**எவ் அசையா ஆதனத்தில் வெளிப்படுத்துநர் அல்லது எவரேனும் மேவப்படும் ஆள் பயனுகர் சொத்துவத்தைக் கொண்டிருக்கின்றாரோ அவ் அசையா ஆதனம்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள், வேறொரு ஆள் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற ஆதனமொன்றின்மேல் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்றீர்களா? அல்லது அதிலிருந்து நன்மைகளைப் பெறுகின்றீர்களா?

**அசையா ஆதனம் 1**

கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற அல்லது நன்மைகளைப் பெறுகின்ற ஆள் :

ஆதன வகை :

ஆதனச் சொந்தக்காரர் :

**ஆதனத்தின் முகவரி**

நாடு :

மாகாணம் :

| | |
|---|---|
| மாவட்டம் | : |
| நகரம் | : |
| அஞ்சல் குறியீடு | : |
| வீதியின் பெயர் | : |
| இருப்பிடக்கூறின் பெயர் அல்லது வீட்டின் பெயர் அல்லது காணியின் பெயர் | : |
| கட்டிடத்தொகுதி இலக்கம் அல்லது வீட்டு இலக்கம் அல்லது மதிப்பீட்டு இலக்கம் | : |
| கட்டிடத் தள இடப்பரப்பு | : |
| காணிப் பரப்பெல்லை | : |
| கட்டுப்பாட்டின் அல்லது பெறப்படும் நன்மைகளின் தன்மை | : |
| எவ்வடிப்படையில் கட்டுப்பாடு பிரயோகிக்கப்படுகின்றது அல்லது நன்மைகள் பெறப்படுகின்றது | : |
| மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**6. வாகனங்கள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

உங்களால் அல்லது மேவப்படும் ஆளினால் (பதியப்பட்டு அல்லது பதியப்படாது) சொந்தமாக வைத்திருக்கப்படும், இலங்கையினுள் அமைவிடத்தைக் கொண்டிருந்தாலுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே அமைவிடத்தைக் கொண்டிருந்தாலுஞ்சரி, உடைமையில் வைத்திருக்கப்படும் அல்லது பயன்பெறுமுகமாக வைத்திருக்கப்படும், எல்லா வகையான வாகனங்களும் அத்தகைய வாகனங்கள் பொதுவில் (அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்) பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழும் (202 ஆம் அத்தியாயமான) வாகனங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் தனிப்பட்ட அல்லது வர்த்தக பயன்பாட்டுக்காக உட்கருதப்படுகின்ற வாகனங்கள்
- எல்லா வகையான நீர் வாகனங்கள்
- விளையாட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள்
- (பயணிகள் அல்லது பண்டங்கள்) வான் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்.

**முக்கியமானது:** வாகனமொன்று, அத்தகைய வாகனம் பயன்பாட்டில் இல்லாதிருப்பினும், வருமானத்தை உருவாக்காதிருப்பினும், ஈட்டொன்றுக்கு அமைந்திருப்பினும், அல்லது சட்டமுறையான பிணக்கொன்றிலிருப்பினும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**பயனுகர் சொத்துவம் அல்லது நன்மைகள்** : வாகனமொன்றின் சட்டமுறையான உரித்து வேறொரு ஆளினால் வைத்திருக்கப் படுகின்றதெனினும்கூட அத்தகைய வாகனமொன்றின் மீதான ஏதேனும் பொருளாதார அல்லது கட்டுப்பாட்டு உரிமைகளை அனுபவிக்கப்படுமிடத்தான உங்களால் அல்லது மேவப்பட்ட ஆளொருவரினால் நிலைமைகளை உள்ளடக்குகின்றது. உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- அத்தகைய வாகனத்திலிருந்து வாடகை, வருமானம், இலாபங்கள், அல்லது விற்பனை வரும்படிகளைப் பெறுதல்.
- (தொழிலுக்கான அல்லது வர்த்தக பயன்பாட்டுக்கான) அத்தகைய வாகனத்தை ஆக்கிரமிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உரிமைகளைக் கொண்டிருத்தல்.
- வாடகை, அல்லது முகாமைத்தும் போன்ற அத்தகைய வாகனம் பற்றிய முடிபுகளைக் கட்டுப்படுத்தல்.
- உரித்தானது வேறொரு ஆளின் பெயரிலிருக்கும் போது அத்தகைய வாகனத்துக்கு நிதியளித்தல் அல்லது உதவுதொகையளித்தல்.

நீங்கள் அல்லது மேவப்பட்ட ஆளொருவர் நடைமுறையில் அத்தகைய வாகனத்தின் இந்நன்மைகளை அல்லது கட்டுப்பாட்டை அனுபவிப்பின், எழுத்திலான உடன்படிக்கையொன்றில்லாதிருப்பினும் பயனுகர் சொத்துவம் அல்லது நன்மைகள் உளதாயிருக்கும்.

**விசேட குறிப்பு :** நீங்கள் அரசாங்கத்தினால் குறித்தளிக்கப்பட்ட வாகனங்களை வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படவில்லை.

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்படும் ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது உடைமையில் வைத்திருக்கப்படும் வாகனங்கள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்படும் ஆள் ஏதேனும் வகையான வாகனத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்றீர்களா அல்லது உடைமையில் வைத்திருக்கின்றீர்களா?

**வாகனம் 1**

| | |
|---|---|
| வாகனச் சொந்தக்காரர் | : |
| வாகனத்தின் வகை அல்லது விவரணம் | : |
| உண்மையான சொந்தக்காரர் இருப்பின், உண்மையான சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் | : |
| அத்தகைய வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதா, இல்லையா? | : |
| பதிவிலக்கம் | : |
| வாகனம் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற நாடு | : |
| இலக்கம் அல்லது வாகன அடையாளப்படுத்துகை இலக்கம் | : |
| தயாரிப்பு | : |
| மாதிரி | : |
| உற்பத்தி ஆண்டு | : |
| கொள்ளப்பட்ட தேதி | : |
| கொள்ளப்பட்ட பெறுமதி | : |
| மேலதிக தகவல் எதேனுமிருப்பின் | : |

**எவ் வாகனங்களில் வெளிப்படுத்துநர் அல்லது எவரேனும் மேவப்படும் ஆள் பயனுகள் சொத்துவத்தைக் கொண்டிருக்கின்றாரோ அவ் வாகனங்கள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் வேறொரு ஆளினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் (அரசாங்கக் குறித்தளிப்பு வாகனங்களை தவிர்ந்த) வாகனமொன்றைப் பயன்படுத்துகின்றீர்களா, கட்டுப்படுத்துகின்றீர்களா அல்லது அதிலிருந்து வேறுவகையான நன்மை பெறுகின்றீர்களா?

**வாகனம் 1**

| | |
|---|---|
| வாகனத்தைப் பயன்படுத்துகின்ற, கட்டுப்படுத்துகின்ற அல்லது அதிலிருந்து நன்மைகளை பெறுகின்ற ஆளின் பெயர் | : |
| வாகனத்தின் வகை அல்லது விவரணம் | : |
| உண்மையான சொந்தக்காரரொருவர் இருப்பின், உண்மையான சொந்தக்காரரின் பெயரும், முகவரியும் | : |
| வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதா அல்லது இல்லையா? | : |
| பதிவிலக்கம் | : |
| வாகனம் பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற நாடு | : |
| அடிச்சட்டக இலக்கம் அல்லது வாகனத்தின் அடையாளப்படுத்துகை இலக்கம் | : |
| தயாரிப்பு | : |
| மாதிரி | : |
| உற்பத்தித் தேதி | : |
| வாகனச் சொந்தக்காரர் | : |
| வாகனத்தின் காப்புறுதியை வைத்திருப்பவர் | : |
| கட்டுப்பாட்டின் அல்லது பெறப்படும் பயன்களின் தன்மை | : |
| எவ்வடிப்படையில் கட்டுப்பாடு பிரயோகிக்கப்படுகின்றது அல்லது நன்மைகள் பெறப்படுகின்றது | : |
| எப்போதிலிருந்து நீங்கள் கட்டுப்படுத்துகின்றீர்கள் அல்லது பெறுகின்றீர்கள் | : |
| வாகனத்திலிருந்தான நன்மைகள் | : |
| மேலதிகத் தகவல் ஏதேனுமிருப்பின் | : |

**7. நகைகளும் வேறு பெறுமதிவாய்ந்த சொத்துக்களும்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் (பதியப்பட்டு அல்லது பதியப்படாது) சொந்தமாக வைத்திருக்கப்படும், உடைமையில் வைத்திருக்கப்படும் அல்லது பயன்பெறுமுகமாக வைத்திருக்கப்படும் இலங்கையினுள் இருப்பினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே இருப்பினுஞ்சரி, (நகையொன்றினதும் வேறு பெறுமதிவாய்ந்த சொத்தினதும் அல்லது நகைகளின் சேகரிப்புக்களினதும் வேறு பெறுமதிவாய்ந்த சொத்துக்களினதும் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து) எல்லா வகையான நகைகளும் வேறு பெறுமதி வாய்ந்த சொத்துக்களும். அத்தகைய நகைகளும் வேறு பெறுமதி வாய்ந்த சொத்துக்களும், பொதுவில் (ஆனால் வரையறுக்கப்படாமல்) பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- அணியக்கூடிய நகைகள் (தங்கம், வெள்ளி, பிலாட்டினியம் அல்லது வேறு விலையுயர்ந்த பொருட்கள்), கடிகாரங்கள் முதலியன.
- முதலீட்டு நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட உருக்கப்படாத தங்கம், வெள்ளி, பிலாட்டினியம் அல்லது வேறு விலையுயர்ந்த பொருட்கள்.
- இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் வேறு விலையுயர்ந்த பூமிப் பொருட்கள் (வெட்டப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது மூல வடிவத்திலிருப்பினுஞ்சரி)
- முத்திரைகள், நாணயங்கள் முதலிய சேகரிக்கக்கூடிய விடயங்கள்
- தொல்பொருட்கள் கலை வேலைகள் முதலியன

**முக்கியமானது:** நகைகள் வேறு பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அத்தகைய நகைகளும் வேறு பெறுமதி வாய்ந்த சொத்துக்களும் பயன்பாட்டிலில்லாதிருப்பினும் வருமானத்தை உருவாக்காதிருப்பினும், ஈட்டொன்றிற்கமைந்திருப்பினும் அல்லது சட்டமுறையான பிணக்கொன்றிலிருப்பினும்கூட வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**பயனுகர் சொத்துவம் அல்லது நன்மைகள்**, சட்டமுறையான உரித்து வேறொரு ஆளினால் வைத்திருக்கப்பட்டிருப்பினும்கூட நகையொன்றின் அல்லது பெறுமதிவாய்ந்த சொத்தின் மீதான ஏதேனும் பொருளாதார அல்லது கட்டுப்பாட்டு உரிமைகள் உங்களால் அல்லது மேவப்பட்ட ஆளொருவரினால் அனுபவிக்கப்படுமிடத்தான நிலைமைகளை உள்ளடக்குகின்றது. உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

- உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வழமையாக அணியப்படும் அல்லது வைத்திருக்கப்படும் ஆனால் உறவினரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட நகை அல்லது பெறுமதிவாய்ந்த சொத்துக்கள்.
- தனிப்பட்ட பயன்பாட்டுக்காக கம்பெனியொன்றினால், நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது குடும்ப உறுப்பினரினால் வழங்கப்பட்ட ஏதேனும் நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்து.
- பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக ஆனால் பயன்வலுவில் உங்களுடையதாக நடத்தப்படுகின்ற வேறொரு ஆளினால் வைத்திருக்கப்படும் நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்துக்கள்
- உங்களின் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளின் நிதியிலிருந்து கொள்ளப்பட்ட ஆனால் வேறொருவரின் பெயரில் பதியப்பட்டுள்ள நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்துக்கள்

நீங்கள் அல்லது மேவப்பட்ட ஆளொருவர் நடைமுறையில் அத்தகைய நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தின் இந்நன்மைகளை அல்லது கட்டுப்பாட்டை அனுபவிப்பின், எழுத்திலான உடன்படிக்கையொன்றில்லாதிருப்பினும் பயனுகர் சொத்துவம் அல்லது நன்மைகள் உளதாயிருக்கும்.

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது உடைமையில் வைத்திருக்கப்படும் நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்துக்கள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள், ஏதேனும் நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தை சொந்தமாக அல்லது உடைமையில் வைத்திருக்கின்றீர்களா?

**நகை அல்லது பெறுமதிவாய்ந்த சொத்து 1**

| | |
|---|---|
| சொந்தமாக அல்லது உடைமையில் வைத்திருப்பவர் | : |
| நகை அல்லது பெறுமதிவாய்ந்த சொத்தின் வகை அல்லது வகுதி | : |
| நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தின் விவரணம் | : |
| கூட்டு சொந்தக்காரர்கள் அல்லது உரிமையைக் கொண்டிருப்பவர்களைக் கொண்டிருக்கின்றீர்களா? | : |

கூட்டு சொந்தக்காரர்கள் அல்லது உரிமையுடையோரின் பெயர் :

நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்து எவ்வாறு கொள்ளப்பட்டது :

நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்து எப்போது கொள்ளப்பட்டது :

மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**வெளிப்படுத்துநர் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் பயனுகர் சொத்துவமொன்றைக் கொண்டிருக்கின்ற நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்து**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள், வேறொரு ஆளுக்கு அல்லது உருவகத்துக்குச் சொந்தமான நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தைப் பயன்படுத்துகின்றீர்களா, கட்டுப்படுத்துகின்றீர்களா அல்லது அதிலிருந்து வேறுவகையில் ஏதேனும் நன்மைகளைப் பெறுகின்றீர்களா?

**நகை அல்லது பெறுமதிவாய்ந்த சொத்து 1**

பயன்படுத்துகின்ற கட்டுப்படுத்துகின்ற அல்லது நன்மைகளைப் பெறுகின்ற ஆள் :

நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தின் வகை :

நகை அல்லது வேறு பெறுமதிவாய்ந்த சொத்தின் விவரணம் :

நகை அல்லது வேறு பெறுமதி வாய்ந்த சொத்தின் சொந்தக்காரர் :

நன்மைகளின் தன்மை :

எவ்வடிப்படையில் நன்மைகள் பெறப்படுகின்றன :

எப்போதிலிருந்து நீங்கள் நன்மைகளைப் பெறுகின்றீர்கள் :

மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**8. புதுப்புனைவுரிமைகள், பதிப்புரிமைகள் முதலியவாறான வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்துக்கள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

அருவச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது : (புத்தாக்கத்துக்கான உரிமைகள், பயனுள்ள மாதிரி, வழிவகை அறிவு, கைத்தொழில் வடிவமைப்பு அல்லது தாவர இனம், வியாபாரச் சின்னம் அல்லது வியாபாரப் பெயர், பதிப்புரிமைகள், புதுப்புனைவுரிமைகள் முதலிய) புலமைச் சொத்துரிமைகள், நிலத்தடி மண் மற்றும் பிற இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை அல்லது வேறு (குறித்துரைக்கவும்)

பயனுகர் சொத்துவம் அல்லது நன்மை, சட்டமுறையான உரித்து வேறொரு ஆளினால் வைத்திருக்கப்பட்டிருப்பினுங்கூட அருவச் சொத்தொன்றின் மீதான ஏதேனும் பொருளாதார அல்லது கட்டுப்பாட்டு உரிமையை நீங்கள் அனுபவிக்கின்றவிடத்தான அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் அனுபவிக்கின்றவிடத்தான நிலைமைகளை உள்ளடக்குகின்றது

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளின் பெயர்களில் சட்டமுறையாக சொந்தமாக வைத்திருக்கும் அல்லது பதிவுசெய்யப்பட்டிருக்கும் (புதுப்புனைவுரிமைகள், பதிப்புரிமைகள் முதலிய) வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்துக்கள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள், ஏதேனும் வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்தின் (சட்டமுறையான சொத்துவத்தைக்) கொண்டிருக்கின்றீர்களா? அல்லது உங்களது பெயரில் அல்லது எவரேனும் மேவப்பட்ட பெயரில் அத்தகைய வர்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்து பதிவுசெய்யப்பட்டுள்ளதா?

**வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்து 1**

சொந்தமாக அல்லது உடைமையில் வைத்திருப்பவர் :

அத்தகைய சொத்தின் வகை :

அத்தகைய சொத்து பதிவுசெய்யப்பட்டுள்ளதா? :

அத்தகைய சொத்து வர்த்தகமயமாக்கப்பட்டு அரசிறையைத் தோற்றுகின்றதா? :

கொள்ளப்பட்ட தேதி :

எம்முறையில் அத்தகைய சொத்து கொள்ளப்பட்டது :

| | |
|---|---|
| நீங்கள் கூட்டுச் சொந்தக்காரர்கள் அல்லது உரிமைகளுடையோரைக் கொண்டிருக்கின்றீர்களா? | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**வெளிப்படுத்துநர் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் பயனுகர் சொத்துவத்தைக் கொண்டிருக்கின்ற (புதுப்புனைவுரிமைகள், பதிப்புரிமைகள் முதலிய) வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்துக்கள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள், வேறொரு ஆளினால் அல்லது உருவகத்தினால் சட்டமுறையாக சொந்தமாக வைத்திருக்கும் அல்லது அவர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஏதேனும் வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்திலிருந்து ஏதேனும் நன்மைகளைப் பெற்றிருக்கின்றீர்களா?

**வர்த்தகமயமாக்கப்படற்பாலதான அருவச் சொத்து 1**

| | |
|---|---|
| நன்மைகளைப் பெறுகின்ற ஆள் | : |
| அத்தகைய சொத்தின் வகை | : |
| அத்தகைய சொத்து பதிவுசெய்யப்பட்டுள்ளதா? | : |
| அத்தகைய சொத்து வர்த்தகமயமாக்கப்பட்டு அரசிறையை தோற்றுவிக்கின்றதா? | : |
| எச்சொத்திலிருந்து நன்மைகள் பெறப்படுகின்றனவோ அத்தகைய சொத்துக்களின் சட்டமுறையான சொந்தக்காரரின் பெயர் அல்லது எவ்வாளின் பெயரில் அத்தகைய சொத்து பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அவ்வாளின் பெயர் | : |
| நன்மைகளின் தன்மை | : |
| எவ்வடிப்படையில் நன்மைகளைப் பெறப்படுகின்றன | : |
| எப்போதிலிருந்து நீங்கள் பயன்களை பெறுகின்றீர்கள் | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**9. பணவகையான சொத்துக்கள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

உங்களது பெயரின்கீழ் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளின் பெயரின்கீழ் வைத்திருக்கப்படுகின்ற அல்லது அத்தகைய பணவகையான சொத்துக்களிலிருந்து பயனுகர் சொத்துவத்தைப் பெறுகின்ற எல்லாப் பணவகையான சொத்துக்களும் இவ்வகுதியின் கீழான பணவகையான சொத்துக்கள் பின்வருனவற்றை உள்ளடக்குகின்றது -

- **பணம் :** கையிருப்புப் பணம் அல்லது இலங்கை ரூபாய்களில் அல்லது வேறு நாணயத்திலான பாதுபாப்பான வைப்பீடுகள்.
- **வைப்பீடுகள் :** வைப்பீட்டின் வகையை (அதாவது, சேமிப்பு, நடைமுறை, கால வைப்புக் கணக்குகள் முதலியவற்றைப்) பொருட்படுத்தாது கணக்குகளில் செய்யப்பட்ட வைப்பீடுகள்
- **ஓய்வூதியமும் சேமலாப நிதிகளும் :** (மத்திய ஊழியர் சேமலாப நிதியம் (ஊசேநி) ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊநநி) அல்லது உங்களது தொழிலடிப்படையிலான பணிப்புறுத்தும் சேமலாப நிதியம் அல்லது ஓய்வூதியத் திட்டமொன்றைத் தவிர) ஏதேனும் சேமலாபம், மூப்போய்வூதியம் அல்லது இளைப்பாறுகைச் சேமிப்புத்திட்டம், ஆண்டுதொகை அல்லது இளைப்பாறுகைக் காப்புறுதித் திட்டம் முதலியன
- **வழங்கப்படும் அல்லது பெறப்படற்பாலதான கடன்கள் :** (ஒரு மில்லியன் மற்றும் அதற்கு மேல்) : நீங்கள் அல்லது மேவப்பட்ட ஆளொருவர் பெறுநராக, கடன்கொடுநராக அல்லது ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுக நன்மைகளைப் பெறுநராகவிருப்பின், தனியாட்களுக்கு முற்கொடுக்கப்பட்ட தனிப்பட்ட கடன்கள், வழங்கப்பட்ட தொழில் அல்லது வர்த்தகக் கடன்கள், நிலுவையிலுள்ள பெறப்படற்பாலதானவைகள், சத்தியக் குறிப்புக்கள் அல்லது ஒத்த சாதனங்கள் முதலியன போன்றவை.

**வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் கையிருப்புப் பணம்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் ஏதேனும் கையிருப்புப் பணத்தினைக் கொண்டிருக்கின்றீர்களா?

**கையிருப்புப் பணம் 1**

| | |
|---|---|
| சொந்தமாக அல்லது உடைமையில் வைத்திருப்பவர் | : |
| நாணய வகை | : |
| வெளிப்படுத்துகை தேதியிலான மீதி | : |

**இலங்கையில் தொழிற்படும் வங்கிகளுடனும் நிதிசார் நிறுவகங்களுடனும் வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் கணக்குகளும் வைப்புக்களும்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் இலங்கையில் தொழிற்படும் வங்கிகளில் அல்லது நிதிசார் நிறுவகங்களில் ஏதேனும் கணக்கு அல்லது வைப்புகளை வைத்துள்ளீர்களா?

**கணக்கும் வைப்புக்களும் 1**

| | |
|---|---|
| கணக்கு அல்லது வைப்புச் சொந்தக்காரர் | : |
| வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் | : |
| கணக்கு வகை | : |
| கணக்கிலக்கம் அல்லது வைப்பிற்கான குறிப்பீடு இலக்கம் | : |
| இணைந்த கணக்கொன்று அல்லது வைப்பொன்றா? | : |
| இணைந்த கணக்கு அல்லது வைப்புத் தகவல் | : |
| நாணய வகை | : |
| வெளிப்படுத்துகைத் தேதியிலான மீதி | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**(வெளிநாட்டு உருவகங்களுட்பட) வேறு உருவகங்களில் அல்லது தனிநபர்களுடன் வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் வைப்புக்கள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் (வெளிநாட்டு உருவகங்களுட்பட) வேறு உருவகங்களில் அல்லது தனிநபர்களுடன் ஏதேனும் வைப்பு வைக்கப்பட்டுள்ளதா?

**வைப்பு 1**

| | |
|---|---|
| வைப்பின் சொந்தக்காரர் | : |
| வைப்பினை வைத்திருக்கும் உருவகம் அல்லது ஆள் | : |
| வைப்பின் தன்மை | : |
| வைப்பிலக்கம் அல்லது வைப்பின் குறிப்பீடு | : |
| நீங்கள் கூட்டுச்சொத்தாண்மையைக் கொண்டிருக்கின்றீர் களா? | : |
| கூட்டுச் சொத்தாண்மைத் தகவல் | : |
| கூட்டுச்சொத்தாண்மையின் பங்கு | : |
| நாணய வகை | : |
| தொடங்கும் தேதி | : |
| வெளிப்படுத்துகைத் தேதியிலான மீதி | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் கணனி வழிப்படிவத்திலான மற்றும் எண்ணிம நாணயம்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் ஏதேனும் கணனி வழிப்படித்திலான அல்லது எண்ணிம நாணயம் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதா?

**கணணி வழிப்படிவத்திலான அல்லது எண்ணிம நாணயம் 1**

| | |
|---|---|
| நாணயச் சொந்தக்காரர் | : |
| கணனி வழிப்படிவத்திலான அல்லது எண்ணிம நாணய வகை | : |
| எப் பணப்பைத் தளத்தில் அத்தகைய நாணயம் வைக்கப்பட்டிருக்கின்றதோ அப் பணப்பைத் தளம் | : |
| அத்தகைய நாணயம் எவ்வாறு கொள்ளப்பட்டது | : |

வெளிப்படுத்துகைத் தேதியிலான அளவு :

மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வழங்கப்பட்ட கடன்கள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வேறொரு தனிநபருக்கு அல்லது உருவகத்திற்கு கடனொன்றாக ஏதேனும் தொகை வழங்கப்பட்டுள்ளதா?

**கடன் 1**

கடன் வழங்கியவர் (வழங்குநர்) :

கடன் யாருக்கு வழங்கப்பட்டது (கடன்பெறுநர்) :

வழங்கப்பட்ட கடனுக்கெதிரான பிணை :

வழங்கப்பட்ட கடன் தொகை :

கடனுக்கான வட்டிவீதம் :

வெளிப்படுத்துகைத் தேதியிலான மீதி :

மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின்

**10. நம்பிக்கைப் பொறுப்பு**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

- வெளிப்படுத்துநரின் சார்பில் அல்லது மேவப்பட்ட ஆள் சார்பில் எவரேனும் ஆளினால் அல்லது உருவகத்தினால் கொள்ளப்பட்ட ஆதனம்
- வேறொரு ஆள் அல்லது உருவகத்தின் சார்பில் வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் கொள்ளப்பட்ட ஆதனம்

அத்தகைய ஆதனம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது;

- அசைவற்ற ஆதனமும் அசைவுள்ள சொத்துக்களும்
- கம்பெனி பங்குகள், பணம், அருவ அல்லது எண்ணிம நாணயங்கள் முதலியன

**வெளிப்படுத்துநர் அல்லது மேவப்பட்ட ஆள் சார்பில் எவரேனும் ஆளினால் அல்லது உருவகத்தினால் நம்பிக்கைப்பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள ஆதனம்**

எவரேனும் ஆளினால் அல்லது உருவகத்தினால் வெளிப்படுத்துநர் அல்லது மேவப்பட்ட ஆள் சார்பில் நம்பிக்கைப் பொறுப்பில் ஏதேனும் ஆதனம் வைத்திருக்கப்படுகின்றதா?

**நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படுகின்ற ஆதனம் 1**

யாருடைய சார்பில் அத்தகைய ஆதனம் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்பட்டிருகின்றது :

எவ்வாதனம் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது :

அத்தகைய ஆதனம் எத்தேதியில் நம்பிக்கைப் பொறுப்பிலிடப்பட்டது :

அத்தகைய ஆதனம் எத்தேதியில் நம்பிக்கைப் பொறுப்பிலிடப்பட்டது :

எத்தனியாள் அல்லது உருவகம் அத்தகைய ஆதனத்தைக் வைத்திருந்தனர் :

அத்தகைய ஆதனத்திலிருந்து பயன்பெறுபவர் யார் :

மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**வேறொரு ஆள் அல்லது உருவகம் சார்பில் வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படும் ஆதனம்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால், வேறு எவரேனும் ஆள் அல்லது உருவகம் சார்பில் ஏதேனும் ஆதனம் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றதா?

**நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கின்ற ஆதனம் 1**

| | |
|---|---|
| நம்பிக்கைப் பொறுப்பில் ஆதனத்தைக் கொண்டிருக்கின்ற ஆள் | : |
| எவ்வாதனம் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றது அத்தகைய ஆதனத்தின் விபரங்கள் | : |
| எத்தேதியில் அத்தகைய ஆதனம் நம்பிக்கைப் பொறுப்பிலிடப்பட்டது | : |
| யார் சார்பில் அத்தகைய ஆதனம் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது | : |
| அத்தகைய ஆதனத்திலிருந்து பயன்பெறுபவர் யார் | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**11. நிதிசார் முதலீட்டுச் சொத்து மற்றும் கூட்டிணைப்பு அக்கறைகள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

வெளிப்படுத்துகை காலப்பகுதியின் போது உங்கள் பெயரின் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளின் பெயரின் கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் நிதிசார் முதலீட்டுச் சொத்தும் கூட்டிணைப்பு அக்கறைகளும் இவ்வகுதியிலுள்ள பொதுவான சொத்துக்களின் வகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:-

- **பங்குகள் :** பகிரங்க அல்லது தனியார் கம்பெனிகள் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், தொகுதிக்கடன்கள், கூட்டிணைப்பு முறிகள், திறைசேரி மசோதாக்கள் மற்றும் திறைசேரி முறிகள், செலவானி வர்த்தக பங்குகள் (ETFs), (நம்பிக்கைப் பொறுப்புக்கள் அலகு மற்றும் பரஸ்பர நிதிகள் முதலியனவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாதவை உட்பட, பட்டிலியலிடப்பட்டதாயினுஞ்சரி பட்டியலிடப்படாததாயினுஞ்சரி எல்லா ஒப்புரவுகளும் தனிசுப் பிணைப்பொறுப்புக்களும்.
- **பணப் பெறுமதியுடனான காப்புறுதிகள்** : ஆயுட் காப்புறுதிகள், காப்புறுதிகள், முதலீட்டுடன் இணைந்த காப்புறுதி திட்டங்கள் முதலியன.
- **இயக்குநராண்மைகளும் அக்கறைகளும்** : நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் இயக்குநரொருவராக, பங்காளராக, நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது கம்பெனியொன்றின் அல்லது தொழிலொன்றின் பதவிதாங்குநரொருவராக இருப்பின்; அல்லது
- நீங்கள், எவரேனும் மேவப்பட்ட ஆளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரால், நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் உங்கள் சார்பில் வைத்துக்கொள்ளப்பட்டு அதன் அலுவலகப் பதிவுகளில் அவர்களின் பெயரில் காட்டப்படாதிருப்பினுங்கூட நீங்கள் நிதிசார் நன்மைபெறல் அல்லது கம்பெனியின் முடிபுகளில் செல்வாக்கு செலுத்த முடிதல்; அல்லது
- எவரேனும் மேவப்பட்ட ஆள், எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரால் நம்பிக்கைப் பொறுப்பளரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் அவர் சார்பில் வைத்திருக்கப்படும் அக்கறையொன்றைக் கொண்டிருப்பின், அவர்களின் பெயர் அதன் அலுவலக பதிவுகளில் காட்டப்படாதிருப்பினும், அத்தகைய மேவப்பட்ட ஆள் நிதிசார் நன்மைபெறல் அல்லது கம்பெனியின் முடிபுகளில் செல்வாக்கு செலுத்த முடிதல்.

**நீங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களிலும் நிதிசார் முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் கூட்டிணைப்பு அக்கறைகளை வெளிப்படுத்துதல் வேண்டும்.**

- கம்பெனி செயற்பாடாதிருத்தல் அல்லது இலாபமொன்றினை ஆக்காதிருத்தல்
- நீங்கள் அக்காலப்பகுதியின் போது ஏதேனும் வருமானத்தை பெறாதிருத்தல்
- நிதிசார் முதலீட்டுச் சொத்து மற்றும் கூட்டிணைப்பு அக்கறைகள் இலங்கைக்கு வெளியேயிருத்தல்

வெளிப்படுத்துகையானது, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தனியே கொள்ளப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டாக கொள்ளப்பட்டதாயினுஞ்சரி ஏதேனும் நன்மைகளைப் பெறுகின்ற, ஏதேனும் சட்ட அல்லது பயனுகர் அக்கறைகளைக் கொண்டிருக்கின்ற உங்களால் அல்லது வேவப்பட்ட ஆளொருவரால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது பயனுகர் கொள்ளப்படும் எல்லா நிதிசார் முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் கூட்டிணைப்பு அக்கறைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

**(உள்ளூர் அல்லது சர்வதேச) வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்துக்கொள்ளப்படும் பட்டியிலிடப்பட்ட பங்குத் தொகுதிகளிலும் பங்குகளிலுமான பகிரங்க முதலீடுகள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் பட்டிலியலிடப்பட்ட பங்குத்தொகுதிகளில் அல்லது பங்குகளில் பகிரங்கமாக முதலீடுகள் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதா?

**பட்டியலிடப்பட்ட பங்குத்தொகுதிகளிலும் பங்குகளிலுமான பகிரங்க முதலீடுகள் 1**

| | |
|---|---|
| முதலீட்டாளர் அல்லது கொள்வனவாளர் | : |
| பங்குத்தொகுதிச் சந்தை | : |
| மத்திய வைப்பக முறைமை (CDS) வர்த்தக கணக்கிலக்கம் அல்லது அடையாளக் குறி | : |
| டிக்கர் குறியீடு | : |
| வழங்குநர் அல்லது கம்பெனி | : |
| வழங்குநரது நாடு | : |
| சர்வதேச பிணைப்பொறுப்புக்களின் அடையாளப்படுத்துகை இலக்கம் (ISIN) | : |
| வெளிப்படுத்துகை தேதியில் பங்குகளின் எண்ணிக்கை | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் தனியார் அல்லது பட்டியிலப்படாத முதலீடுகள் (உள்ளூர் அல்லது சர்வதேசம்)**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் தனியார் அல்லது பட்டியலிடப்படாத பங்குகளில் முதலீடுகள் வைத்துக்கொள்ளப்படுகின்றதா?

**தனியார் அல்லது பட்டியலிடப்படாத பங்குகளின் முதலீடுகள் 1**

| | |
|---|---|
| முதலீட்டாளர் | : |
| வழங்குநர் அல்லது கம்பெனி | : |
| வழங்குநரின் தொழிற் பதிவிலக்கம் | : |
| வெளிப்படுத்துகை தேதியில் பங்குகளின் சதவீதம் | : |
| வட்டி வகை | : |
| முதலீட்டின் ஆண்டு | : |
| முதலீட்டின் தன்மை | : |
| முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**உங்களால் அல்லது மேவப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட காப்புறுதித்திட்டங்கள் திட்டங்களிலான முதலீடுகள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் காப்புறுதித்திட்டங்களில் அல்லது திட்டங்களில் முதலீடு வைத்திருக்கப்படுகின்றதா?

**காப்புறுதித் திட்டம் அல்லது திட்டங்களிலான முதலீடுகள் 1**

| | |
|---|---|
| காப்புறுதியை வைத்திருப்பவர் | : |
| காப்புறுதிக் கம்பெனி அல்லது வழங்குநர் | : |
| காப்புறுதி இலக்கம் | : |
| காப்புறுதியின் வகை | : |
| பயனுகர் | : |
| தொடங்கும் தேதி | : |
| பிரீமியம் தொகை (ஆண்டு தோரும்) | : |
| முதிர்வுப் பெறுமதி | : |

முதிர்வு ஆண்டு :
மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் வேறேதேனும் வகைகளிலான முதலீடுகள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வேறேதேனும் வகைகளிலான முதலீடுகள் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதா?

**வேறேதேனும் வகைகளிலான முதலீடு 1**

முதலீட்டாளர் :
முதலீட்டு ஆண்டு :
முதலீட்டின் வகை :
முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை :
பயனுகர் :
பயன்களின் பெறுமதி :
மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் :

**வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் கூட்டிணைப்பு அக்கறைகள்**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் வேறேதேனும் வகைகளிலான முதலீடுகளைக் கொண்டிருக்கின்றீர்களா?

**கூட்டிணைப்பு அக்கறைகள் 1**

கூட்டிணைப்பு அக்கறையைக் கொண்டிருக்கின்ற ஆள் :
கம்பெனி அல்லது உருவகத்தின் பெயர் :
உருவகத்தின் வகை :
பதிவிலக்கம் :
கூட்டிணைப்பு அக்கறை அல்லது கொள்ளப்பட்ட நிலையின் தன்மை :
சொத்தாண்மை சதவீதம் :
எப்போதிலிருந்து :
மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின்

**12. செலவினங்கள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

தனியாள் செலவினமொன்றின் பெறுமதி அல்லது ஒவ்வொரு செலவின வகுதியின் கீழான மொத்த செலவினங்கள் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் பத்து மில்லியன் ரூபாவுக்குமிடையே வருகின்றதாவிருக்குமிடத்து, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி வெளிப்படுத்துகை காலப்பகுதியின் போது உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் உறப்பட்ட எல்லா முக்கிய செலவினங்களும்.

(பத்துமில்லியன் ரூபா அல்லது செலவினப் பெறுமதியிலும் அதிகமான முக்கியமான மாற்றமொன்று நிகழ்ந்திருப்பின், மற்றும் நீங்கள் அத்தகைய செலவினத்தின் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் நிமித்த வெளிப்படுத்துகையொன்றைச் சமர்ப்பித்திருப்பின், அது இங்கு உள்ளடக்கப்படத் தேவையில்லை. எவ்வாறாயினும், அத்தகைய வெளிப்படுத்துகை நிமித்த வெளிப்படுத்துகையொன்றினூடாக வெளிப்படுத்தப்படாதிருப்பின், இயைபான விபரங்கள் இங்கே வழங்கப்படுதல் வேண்டும்)

அத்தகைய செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது –

- சேமலாப நிதியமொன்றுக்கு செய்யப்பட்ட உதவுதொகைகள், காப்பீட்டு கொடுப்பனவுகள் (ஆயுள் காப்புறுதி உட்பட) அல்லது ஓய்வூதிய திட்டமொன்று
- நிகழ்வுசார் செலவினங்கள் : திருமணம், மரணச்சடங்கு அல்லது வேறு முக்கியமான நிகழ்வுசார் செலவினங்கள்

- பயணச் செலவினங்கள் : உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பயணங்களுக்காக உறப்பட்ட செலவுகள்
- சமயசார் அல்லது தரும உதவிசார் அல்லது வேறு வகைகளினதான நிறுவகங்களுக்கான நன்கொடைகள்

**முக்கியம் :** நீங்கள் வழமையான சிட்டைகளையும் நாளாந்த செலவினங்களையும் வெளிப்படுத்துவதற்கு அவசியப்படுத்தப்படவில்லை.

நீங்கள் இச் செலவினங்கள் இலங்கைக்கு வெளியில் உறப்பட்டிருப்பினும் அத்தகைய செலவினங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

**வெளிப்படுத்துகைக் காலப்பகுதியின் போது உறப்பட்ட முக்கிய செலவினங்கள் (தனியாளொருவரின் செலவினம் அல்லது மொத்த செலவின வகுதி ஒருமில்லியன் ரூபாவுக்கும் பத்து மில்லியன் ரூபாவுக்குமிடையிலிருக்குமிடத்து)**

உங்களுக்கு அல்லது மேவப்பட்ட ஆளுக்கு, தனியாளொருவரின் செலவினம் அல்லது ஒவ்வொரு செலவின வகுதியின் கீழான மொத்த செலவினம் வெளிப்படுத்துகைக் காலப்பகுதியின் போது, ஒரு மில்லியன் ரூபாவுக்கும் பத்துமில்லியன் ரூபாவுக்கு இடையில் வருகின்றவிடத்து, பாரிய செலவினமெதுவும் உறப்படுகின்றதா?

**செலவினம் 1**

| | |
|---|---|
| செலவினம் உறுகின்ற ஆள் | : |
| செலவின வகுதி | : |
| விவரணம் | : |
| நாணயத்தின் வகை | : |
| தொகை | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**13. பொறுப்புக்கள்**

நான் எதனை வெளிப்படுத்துதல் வேண்டும்?

வெளிப்படுத்துகை தேதியில், இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி, நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் திருப்பிச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் முக்கியமான நிதிசார் பொறுப்புக்களையும் இது முறைசார் கடன்கள், முறைசாரா கடன்கள் மற்றும் வேறு சட்டமுறையான அல்லது நிதிசார் கடப்பாடுகளை உள்ளடக்குகின்றது. உங்கள் வெளிப்படுத்துகை, பொதுவில், பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

- **முறைசார் பொறுப்புக்கள்**: வங்கிக்கடன்கள் (வீடு, வாகனம், தனிப்பட்ட அல்லது கல்விசார் கடன்கள்), ஈடுக்கள் அல்லது ஆதனத்தின் மீதான பிணைப்பொறுப்புக் கடன்கள், வரவு அட்டைகள், மிகைப்பற்றுக்கள் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட
- வரவு வசதிகள் போன்றவாறான அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வரவு நிதிசார் நிறுவகங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களும் வசதிகளும்.
- **முறைசாராபொறுப்புக்கள்:** குடும்பஉறுப்பினர்கள்அல்லது நண்பர்களிடமிருந்தானகடன்கள்,தனியாளொருவரிடமிருந்தான பணக் கடன்பெறுகைகள், நீங்கள் தனிப்பட்டவராக பொறுப்புக்கூறுகின்றவிடத்தான முறைசாரா தொழில் கடன் பெறுகைகள் போன்றவாறான தனியாட்கள் அல்லது உருவகங்களிடமிருந்து பெறப்படும் கடன் பெறுகை வசதிகள்.
- **வேறு பொறுப்புக்கள் (சட்ட அல்லது விசேட கடப்பாடுகள்):** கடன்களின்கீழ் வராத ஆனால் நீங்கள் வேறொரு ஆளின் அல்லது கம்பெனியின் கடனுக்காக உத்தரவாதங்கள் அல்லது பிணைப்பொறுப்புக்கள் போன்றவாறாக செலுத்துவதற்கு சட்டமுறையாக தேவைப்படுத்தப்படுகின்ற நிதிசார் கடப்பாடுகள், நீதிமன்றம் கட்டளையிட்ட கொடுப்பனவுகள் அல்லது நட்டஈடு, நிலுவை வரி அல்லது நியதிச்சட்ட வருமதிகள், நீங்கள் தனிப்பட்டவராக பொறுப்பாகவிருக்கின்றவிடத்தான தொழில் தொடர்புடைய கடப்பாடுகள்.

**முக்கியம்:** நீங்கள், பொறுப்புக்கள் இலங்கையில் வைத்திருப்பதாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டில் வைத்திருப்பதாயினுஞ்சரி அதனைக் கவனத்திலெடுக்காது, மீளக்கொடுப்பனவு இன்னமும் ஆரம்பிக்கப்படாதிருப்பினும்கூட பொறுப்புகளை வெளிப்படுத்துதல் வேண்டும்.

நீங்கள் வழமையான சிட்டைகளையும் நாளாந்த செலவினங்களையும் வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படவில்லை.

குறிப்பிட்ட பொறுப்பொன்று வெளிப்படுத்தபடவேண்டுமா என நீங்கள் நிச்சயமற்றிருப்பின் அதனை உட்படுத்தி சுருக்கமான விவரணமொன்றை வழங்குக.

**இலங்கையில் தொழிற்படுகின்ற வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களிடமிருந்து வெளிப்படுத்துநரினால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் பெற்றுக்கொள்ளப்படும் கடன்கள் மற்றும் வரவு வசதிகள்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் இலங்கையில் தொழிற்படுகின்ற வங்கிகளிலிருந்தும் நிதிசார் நிறுவனங்களிலிருந்தும் ஏதேனும் கடன்கள் அல்லது வரவு வசதிகள் பெறப்படுகின்றனவா?

**கடன் மற்றும் வரவு வசதிகள் 1**

| | |
|---|---|
| கடன் பெறுநர் | : |
| கடன் அல்லது வசதி வகை | : |
| வழங்குநரின் பெயர் | : |
| வெளிப்படுத்துகைத் தேதியிலான பெற்ற தொகை | : |
| நாணயத்தின் வகை | : |
| வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பு | : |
| வட்டி வீதம் | : |
| மேலதிகத் தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் (வெளிநாட்டு வழங்குநருட்பட) எவரேனும் தனியாள் அல்லது வேறுவகை வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களும் வரவு வசதிகளும்**

உங்களால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் (வெளிநாட்டு வழங்குநருட்பட) எவரேனும் தனியாள் அல்லது வேறுவகை வழங்குநரிடமிருந்து கடன்கள் அல்லது வரவு வசதிகள் பெறப்பட்டுள்ளனவா?

**கடன் மற்றும் வரவு வசதி 1**

| | |
|---|---|
| கடன் பெறுநர் | : |
| கடன் அல்லது வசதியின் வகை | : |
| வழங்குநரின் பெயர் | : |
| கடன் ஆரம்பிக்கும் திகதி | : |
| கடன் தொகை | : |
| நாணயத்தின் வகை | : |
| எஞ்சிய மீதி | : |
| கடன் வகை | : |
| மீள் கொடுப்பனவை மீதி தேவைப்படுத்துகின்றதா? | : |
| மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**வெளிப்படுத்துநரால் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் பொறுப்புக்களின் ஏதேனும் வேறு வகை**

நீங்கள் அல்லது எவரேனும் மேவப்பட்ட ஆள் பொறுப்புக்களின் ஏதேனும் வேறு வகைகளைக்ந கொண்டுள்ளீரா?

**பொறுப்பு 1**

| | |
|---|---|
| பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற ஆள் | : |
| பொறுப்பின் வகை | : |
| பொறுப்பின் விவரணம் | : |
| வருமதித் திகதி | : |
| பொறுப்பின் தொகை | : |
| நாணயத்தின் வகை | : |
| மேலதிக தகவல், ஏதேனுமிருப்பின் | : |

**சத்தியம் / உறுதியுரை**

நான், இதன்கண் என்னால் தரப்பட்டுள்ள மறுமொழிகளும் அளிக்கப்பட்ட கூற்றுக்களும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய இந்த வெளிப்படுத்துகை எவரேனும் திறத்தவரிடமிருந்து ஏதேனும் அழுத்தம் அல்லது வலுக்கட்டாயம் இல்லாமல் உண்மையாகச் செய்யப்படுகிறது என்றும் இத்தால் பயபக்தியாகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன் / சத்தியம் செய்கின்றேன். எவையேனும் வெளிப்படுத்தப்படாத சொத்துக்கள் அத்துடன் / அல்லது பொய்யான வெளிப்படுத்துகை கண்டுபிடிக்கப்பட்டால் அதன் சட்ட விளைவை நான் முழுமையாக அறிந்துள்ளேன்.

☐ நான் மேலேயுள்ள சத்தியம் அல்லது உறுதியுரையை வாசித்து புரிந்து கொண்டுள்ளேன் என நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

| முழுப் பெயர் | தேதி |
|---|---|

EOG 07-0220/1